# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2008 / 2009 HELD IN AUGUST - 2009

## BBA 26 – MANAGERIAL ECONOMICS

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) சமபயன் ஆய்விலிருந்து தனிநபர் கேள்விக் கோட்டினையும் வருமானக் கேள்விக் கோட்டினையும் பெறுக.

(04 புள்ளிகள்)

(ஆ) ஒரு நுகர்வோன் X,Y என்ற இரு பொருட்களை நுகர்கின்றான் எனக் கருத்திற்கொள்க. அவனுடைய பயன் சார்பின் வடிவமானது பின்வருமாறு அமையும்.

$$\mathbf{U = X^{0.4}\ Y^{0.6}}$$

வரவு செலவுத் திட்ட வரையறை $M = Px.\ X+Py.\ Y$ ஆகும். இங்கு Px என்பது X பொருளின் விலை, Py என்பது Y பொருளின் விலை, M என்பது வருமானத்தினையும் குறிக்கின்றது. X, Y பொருட்களை நுகர்வோன் தெரிவு செய்வதன் மூலமாக அவனது பயனானது உச்சப்படுத்தப்படுகின்றது.

(i) நுகர்வோனின் சமநிலையினைப் பெறுக. (02 புள்ளிகள்)

(ii) X,Y பொருட்களின் அளவினைக் காண்க. (04 புள்ளிகள்)

(iii) XY பொருட்களுக்கான மார்சலினது கேள்விச் சார்புகளைப் பெறுக. (04 புள்ளிகள்)

(iv) மேலே பெறப்பட்ட கேள்விச் சார்புகளைப் பயன்படுத்தி X,Y பொருட்களின் விலைகள் முறையே 100/-, 50/- எனவும் நுகர்வோனின் செலவிடத்தக்க வருமானம் 5000/- எனவும் கருதிக்கொண்டு நுகர்வோனின் X,Y பொருட்களுக்கான உத்தம கொள்வனவுச் சேர்க்கையினைக் காண்க.

(03 புள்ளிகள்)

(v) நுகர்வோனின் வருமானத்திலும், X பொருளின் விலையிலும் எவ்வித மாற்றமுமில்லை எனக்கொண்டு ஆனால் Y பொருளின் விலையானது 60/-, 85/-, 90/-, 98/-, 102/- வாக மாற்றம் அடைகின்றன எனக் கொண்டு Y பொருளினுடைய கேள்விச் சார்பினைப் பயன்படுத்தி Y பொர்ருளுக்கான விலைக் கேள்வி அட்டவணையைத் தயாரிக்குக.

(03 புள்ளிகள்)

02. (அ) பின்வரும் விலையிடல் வகைகளைச் சுருக்கமாக விளக்குக.

(i) ஊடுருவல் விலையிடல்
(ii) நிர்வகிக்கப்பட்ட விலையிடல்
(iii) ஒற்றை விலையிடல்
(iv) தனியுரிமை விலையிடல்
(v) எதிர்பார்க்கப்பட்ட விலையிடல்

(5 x 2 = 10 புள்ளிகள்)

(ஆ) உற்பத்திப் பொருள் ஒன்றின் விலையானது எவ்வாறு தீர்மானிக்கப்படும் என்பதனை உற்பத்திக்கான வாழ்க்கை வட்ட விலை நிர்ணயிப்பு மாதிரியுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

03. (அ) பின்வரும் தரவுகள் கம்பனியொன்றினால் பல்வேறு வருடங்களில் விற்பனை செய்யப்பட்ட பிஸ்கட் பக்கட் தொடர்பான தொகைகளைக் காண்பிக்கின்றன.

| வருடம் | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொகை (000 அலகுகளில்) | 180 | 200 | 160 | 140 | 100 | 120 | 160 | 180 | 170 | 140 |

பின்வரும் வருடத்திற்கான பிஸ்கட் பக்கட்டிற்கான கேள்வித் தொகையினை எதிர்வு கூறுக. 2010, 2012, 2015, 2019

(08 புள்ளிகள்)

(ஆ) XYZ (PVT) Ltd ஆனது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கான கணனி அச்சு இயந்திரத்திற்கான டோனர்களை எதிர்வுகூறத் தீர்மானித்துள்ளது. இதன் கடந்த காலத் தரவுகள் பின்வருமாறு

| வருடம் | கணனி அச்சு இயந்திரம் (அலகுகளில்) | கணனி அச்சு இயந்திர டோனர் (அலகுகளில்) |
|---|---|---|
| 1998 | 72 | 80 |
| 1999 | 78 | 84 |
| 2000 | 80 | 85 |
| 2001 | 84 | 90 |
| 2002 | 87 | 91 |
| 2003 | 90 | 97 |
| 2004 | 95 | 106 |
| 2005 | 100 | 110 |
| 2006 | 110 | 130 |
| 2007 | 140 | 150 |
| 2008 | 150 | 160 |
| 2009 | 200 | 180 |

மேற்கூறப்பட்ட தரவுகளுக்கு நேர்கோட்டு பிற்செலவுக் கோட்டினைப் பொருத்தி அதன் அடிப்படையில் பின்வரும் ஆண்டுகளுக்கு கணனி அச்சு இயந்திரத்திற்கான டோனர்களை மதிப்பிடுக.

| வருடம் | கணனி அச்சு இயந்திரம் (அலகுகளில்) | கணனி அச்சு இயந்திர டோனர் (அலகுகளில்) |
|---|---|---|
| 2010 | 240 | ? |
| 2011 | 242 | ? |
| 2013 | 246 | ? |
| 2014 | 250 | ? |
| 2016 | 251 | ? |
| 2018 | 262 | ? |
| 2020 | 264 | ? |
| 2021 | 270 | ? |
| 2024 | 274 | ? |
| 2025 | 275 | ? |
| 2030 | 280 | ? |

(12 புள்ளிகள்)

04. (அ) பல்வேறுபட்ட மூலதன நகர்வினையும், பல்வேறுபட்ட நாணயமாற்று வீதங்களையும் பயன்படுத்தி இலங்கை போன்ற சிறிய திறந்த பொருளாதாரங்களில் நாணய நடைமுறைக் கொள்கையின் கீழான சார்பு ரீதியான செயற்றிறன்களை மதிப்பிடுக. மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு எவ்வகையான நாணயமாற்று வீத முறை பொருத்தமானது என வரைபட ரீதியாக விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) வர்த்தக தாராளமயமாக்கத்தில் பல்தேசிய கம்பனிகளினதும் (MCNs), பரிமாற்றத் தேசிய கம்பனிகளினதும் (TNCs) பங்களிப்புக்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

05. (அ) நீர் ஜனாதிபதிக்கு பொருளாதார ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கின்றீர். ஜனாதிபதி வேலையின்மையைக் குறைப்பதிலும், பணவீக்கத்தை குறைப்பதிலும் ஆர்வம் கொண்டுள்ளார். இவ்இரண்டும் ஒரேவேளையில் அடையப்பட முடியாதவை என அவருக்கு ஆலோசனை அளிக்கப்பட்டுள்ளது. தயவுசெய்து அவருக்கு ஆலோசனை வழங்கவும்.

(12 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் வேலைவாய்ப்பிற்கான வாய்ப்புக்களை வழங்குவதில் சர்வதேச நிதி நெருக்கடியின் தாக்கத்தினை கலந்துரையாடுக.

(08 புள்ளிகள்)

***